• காலாண்டு சஞ்சிகை • கனடா காரை மக்களுக்கு • வீடுகளுக்கு இலவச விநியோகம் • 416.821.8390 • 2011 • இதழ் 13

உங்கள் அழகிய புன்னகைக்கு





பிரபல பல் வைத்தியர்
Dr. ஆதி கணபதி சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 300, Scarborough

# எனது ஊர் காரை நகர்











ஈழத்து சிதம்பரம் கும்பாபிஷேகம்
06.06.2011


வெளியீட்டு அனுசரணை
Dr. V. Vijayaratnam M.D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுப்பாளர்
“எனது ஊர் காரைநகர்”
**தீசன் திரவியநாதன்**

331 Trudelle Street
Unit 34
Scarborough, Ont.
M1J 3J9
Canada
Tel: 416 821 8390

## வரவு செலவு அறிக்கை!

காரைநகர் மக்களின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பெரும் துணை நிற்பவை பொது அமைப்புக்களே. ஆனால் இப்பொது அமைப்புக்கள் காரை மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுக்கொண்டு செல்கின்றன. இப்பொது அமைப்புக்கள் மக்களிடத்தில் நம்பிக்கையையும் நாணயத்தையும் இழந்து கொண்டு செல்கின்றன. பொது சேவையை முன்னிறுத்தியும், பொதுப்பணிகளை வழங்குவதுமே தமது கொள்கைகளாக கொண்டு பொது மக்களின் பண உதவியுடன் இயங்கி வரும் இவ்வமைப்புக்கள் பொதுமக்களிற்கு வெளிப்படையாக திறந்த மனத்துடன் இவ்வமைப்புக்களின் நிதி நிலமைகளை காட்டுவதற்கு தயக்கம் காட்டி வருகின்றன.

பெற்றுக்கொண்ட பணத்திற்கு ரசீதும், செலவு செய்த பணத்திற்கு உரிய பதிவும் இருந்தால் அதனை வரவிலும் செலவிலும் பதிந்து சாதாரண வரவு செலவு அறிக்கையை உரிய நேரத்தில் வெளியிடுவதில் என்ன சிரமங்கள் உள்ளன?

கனடாவில் கனடா காரை கலாச்சார மன்றம் கடந்த மூன்று நிர்வாக சபைகளில் தெளிவான வரவு செலவு அறிக்கையை வெளியிட முயற்சித்தது இல்லை. காரைநகரில் காரைநகர் அபிவிருத்தி சபை திரு.ந.பரமசிவம் தலைமையிலான நிர்வாக சபை ஒட்டு மொத்தமாக ராஜினாமா செய்து சென்ற பின்னரும் இதுவரை அக்காலத்திற்கான வரவு செலவு அறிக்கையினை வெளியிட்டது இல்லை. வலந்தலை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்று ஒருவருடமாகின்ற போதிலும் இதுவரை வரவு செலவு அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்த திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழவன்காடு கலாமன்றமும், மணிவாசகர் மடாலய நிர்வாகத்தின் வரவு செலவு அறிக்கையும் மக்களின் நன்மதிப்பையும் நாணயத்தையும் பெற்றுக்கொண்டுள்ள வரவு செலவு அறிக்கைகளாகும். பொதுப்படையாக பெயர் குறிப்பிடாமலும், சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்டாமலும் எழுதுவது இந்த சஞ்சிகையின் வழக்கம் அல்ல.

கனடா காரை கலாச்சார மன்றத்தின் கடந்த இரண்டு வருட வரவு செலவு அறிக்கையில் திட்டமிட்டு பலவிடயங்கள் மறைக்கப்பட்டும், தவறாகவும் பதியப்பட்டும் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த 20 வருடங்களிற்கு மேலாக இயங்கி வரும் கனடா காரை கலாச்சார மன்றம் பொதுக்கூட்டத்தின் போது ஒரே ஒரு பக்கத்தில் இரண்டு வருடங்களிற்கான வரவு செலவு அறிக்கையினை துண்டுக் கணக்காக வெளியிட்டது. பின்னர் இமெயில் ஊடாக மட்டும் மூன்று பக்கங்களைக் கொண்ட சற்று விபரமான வரவு செலவு அறிக்கையினை குறிப்பிடத்தக்க சிலருக்கு மட்டும் அனுப்பியிருந்தது. மக்களிடம் காரைநகர் அபிவிருத்தியை முன்னிறுத்தியும், மண்ணின் பெயராலும் பெறப்படும் பணத்திற்கு இரகசியமாக வரவு செலவு அறிக்கை வெளியிடுவதும், முறையற்ற வரவு செலவு அறிக்கை வெளியிடுவதும் தொடர்ச்சியாக காலம் காலமாக நடைபெற்றுவரும் சம்பவங்களாகும்.

காரைநகர் பொது அமைப்புக்கள் உரிய நேரத்தில் உரிய வகையில் வரவு செலவு அறிக்கையினை பலரது அறிவுரைகளையும் பெற்று உரிய முறையில் வெளியிடுவதே காரை மக்களை பொதுப்பணியில் மேலும் ஊக்குவிக்கும் செயலாக அமையும். ஊர் வளர்ச்சியும், பொது அமைப்புக்களின் முன்னேற்றமும் அத்தியாவசியமானது என்பதனை கருத்தில் கொள்ளும் முதுகெலும்பு வலுவுள்ளவர்கள் இவற்றை தட்டிக்கேட்கும் வல்லமையுடன் முன்வரவேண்டும். தவறென தெரிந்தும் தட்டிக்கேட்காது பேசாமடந்தைகளாக சுதந்திரம் உள்ள நாட்டிலும் தூங்கிக்கிடப்பவர்கள் ஊரிற்கும், நாட்டிற்கும், வீட்டிற்கும் எந்தவிதமாக பயனுள்ள காரியங்களையும் செய்யமாட்டார்கள் என்பது உறுதி.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தின் முதல் Digital Library காரைநகரில்அமையவுள்ளது


ஏப்ரல் 28, 2011 அன்று காரைநகர் இந்துக் கல்லூரி வளாகத்தில் மேற்படி நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 35 இலட்சம் ரூபா செலவில் கட்டிடமும் 65 இலட்சம் ரூபா செலவில் கணணி மற்றும் உபகரணங்களும் பெறுவதற்கு கல்வித்திணைக்களத்தினால் மேற்படி திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் இதுவரை மூன்று டியிற்றல் நூலகங்கள் இருப்பதாகவும், இதுவே வடமாகாணத்தின் முதலாவது டியிற்றல் நூலகமாக அமையவிருப்பதாகவும் காரை இந்து அதிபர் பொன் சிவானந்தராஜா அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் அரச உதவிகளை பெற்று நவீன காலத்திற்கு ஏற்ப கல்வியை வளம்படுத்த கல்வியாளர்கள்உதவி வருகின்ற போதிலும் இடம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் விழித்தெழுந்து உதவிபுரிய முன்வந்தால் மட்டுமே காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும் என தெரிவித் துள்ளார். காரைநகர் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் வெளிநாடுகளில் ஆரம்பிக்கப் படவேண்டும் என்பதுடன், காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்ற பழைய மாணவர்களிற்கு தற்போதைய நிலமைகளை அறிந்து கொள்ளகூடியவகையில் தொடர்பாடல்முறை விரிவாக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



காரைநகர் மண்ணின் பெயரால் இயங்கும் மன்றங்கள் பொதுவாக அனைத்து செயற்பாடுகளையும் நிறை



வேற்றவோ அன்றி செவிமடுத்து தெரியப்படுத்தவோ முடியாதளவில் வேலைப்பழுவிற்கு மத்தியில் இயங்கி வருகின்றன. ஆனால் தனிப்பட்ட பாடசாலைகளின் பழைய மாணவர்கள் தாம் வாழும் நாடுகளில் ஒன்றிணைந்து, தாம் பயின்ற பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய முன்வந்தால் மட்டுமே அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய முடியும் என "எனது ஊர் காரைநகர்" தொகுப்பாளரிடம் தெரிவித்துள்ளார்.

கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள டியிற்றல் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவின்போது தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் மாகாண கல்வி பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தீவக கல்வி பணிப்பாளர் வ.இராதாகிருஸ்ணன், காரை கோட்ட கல்வி பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சாம்பலோடை மயானத்தை அண்டிய பகுதிக்கு மின்சார விளக்கு போடப்பட்டது



கமநெகும திட்டத்தின் கீழ் 3 இலட்சம் ரூபா செலவில் கரையோர மீன்பிடி தொழிலாளர்களிற்கு உதவியாகவும் பாதுகாப்பிற்காகவும் மேற்படி மின்சார விளக்கு போடப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன், கிராமசேவகர் சண்முகசுந்தரம் மற்றும் மின்பிடி பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டு விளக்குகளை முதன் முதலாக ஒளிரவிட்டு ஆரம்பித்து வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல், அழகியல் பொருட்களின் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கழத்தின் உதவியுடன் காரை உதவி அரசாங்க பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மார்ச் 10ம் திகதி மேற்படி கண்காட்சி காரை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.



மேற்படி நிகழ்வு காரை உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது. கிராம அபிவிருத்தி திணைக்கழத்தின் வடமாகாண பணிப்பாளர் திரு.சி.பெலிசியன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். மேற்படிப்பை தொடர முடியாத மகளிரின் வாழ்க்கை தரத்தை உயர்த்த மாகாண ரீதியாக எடுத்து வரும் முயற்சிகளில் மகளிர் தையல் பயிற்சி வகுப்புக்கள் முன்னெடுத்து வரப்படுகின்றது. கடந்த வருடம்



காரைநகரில் ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்ட வகுப்பில் தமது பயிற்சிகளை முடித்துக் கொண்ட மகளிரினால் மேற்படி கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட வடமாணாண பணிப்பாளர் காரை மகளிரின் திறமைகளை புகழ்ந்து உரைநிகழ்த்தினார். யாழ் மாவட்டத்தில் கடந்த காலங்களில் இது போன்ற நான்கு கண்காட்சிகளில் கலந்து கொண்டுள்ளதாகவும் காரைநகரில் நடைபெற்ற இதுபோன்ற கண்காட்சியே தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகவும், தாம் பயின்ற திறமைகளை சிறப்பாக இக்கண்காட்சி மூலம் தெரிய வைத்துள்ளதாகவும், இப்பயிற்சி வகுப்புக்களை உரிய முறையில் கற்று பயன் அடைந்துள்ளது வெளிப்படையாக தெரிகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

### 'மக்கள் கடை"

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் உதவியுடன் காரை மத்தி சிவகாமி அம்மன் கோவிலடியில் மக்கள் கடை மார்ச் 7ம் திகதி திறந்து வைக்கப்பட்டது








## யாழ் போதனா வைத்தியசாலைக்கு இலண்டன் காரை நலன்புரிச்சங்கத்தினர் உதவி

யாழ் போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சை பிரிவு அபிவிருத்திக்காக இலண்டன் காரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்புரிச்சங்கம் 5 இலட்சம் ரூபாய்கள் பெப்ரவரி மாதம் வழங்கியுள்ளது. காரைநகர் அபிவிருத்தி சபையூடாக இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை பணிப்பாளர் பவானி அம்மா அவர்களிடம் இந்நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் இந்நிதி கையளிப்பின் போது டொக்டர் லஷ்மன், டொக்டர் குருபரன் மற்றும் வைத்தியசாலை செயலாளர் பிரசாத் ஆகியோர் உடனிருந்தனர். காரைநகர் வைத்தியசாலையினூடாக



மேற்கொள்ளப்படும் நடமாடும் வைத்தியசேவைக்கு யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் உரிய சேவையினை இதன் மூலம் வழங்குவார்கள் என வைத்தியசாலை நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

## பாராளுமன்ற வரவு செலவு ஒதுக்கீட்டு நிதியினூடாக காரைநகரிற்கு நிதி



பெப்ரவரி 17ம் திகதி மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட ஐக்கியதேசியக்கட்சி முக்கியஸ்தர்கள் இந்நிதியினை கையளித்தனர். மகேஸ்வரன் தர்ம சுரபி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பிரதி தலைவர் கரு ஜெசூரியா, மற்றும் கட்சியின் பொது செயலாளர் திச அத்தநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர் D.N.சுவாமிநாதன், டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா, கலந்து கொள்ள விஜயகலா மகேஸ்வரன் ஆதரவில் தையல் பயிற்சி நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் முன்பள்ளிகள், விளையாட்டு கழகங்களிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. காரைநகரில் உத்தியோக பூர்வமாக இயங்கி வரும் எட்டு கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கும், பெரியமணல் மாதர் அபிவிருத்தி சங்கம், பிட்டியெல்லை மாதர் அபிவிருத்தி சங்கம் என்பவற்றிற்கு தளபாடங்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன், தங்கோடை, கோவளம், வேதரடைப்பு, விளானை,



திக்கரை, தோப்புக்காடு, வியாவில், கல்லந்தாழ்வு ஆகிய கிராம அபிவிருத்தி சங்கங்களிற்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் வழங்கப்பட்டன.நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு மீன்பிடி உபகரணங்களும், கசூரினா கடற்கரையில்



மலசலகூடம் அமைப்பதற்கு காரைநகர் பிரதேச சபைக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. 50 இலட்சத்திற்கு மேற்பட்ட நிதி உதவிகளை இதனூடாக திருமதி விஜயகலாமகேஸ்வரன் அவர்கள் காரை மண்ணிற்கு பெற்றுக் கொடுத்துள்ளார். அதனை வைபவரீதியாக கையளித்து வைப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி முன்னணி பிரமுகர்களை காரைநகர் அழைத்து வந்து அவற்றை உரியவர்களிற்கு கையளித்து வைத்துள்ளார்.

அத்துடன் காரைநகரில் உள்ள தனது சொந்த வீட்டில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் நடாத்தியுள்ளார். பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்த இந்நிகழ்வுகள் யாழ் நகரில் பெரும் பரபரப்பையும் சிறப்பையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஊரி பாடசாலையில் 3மில்லியன் ரூபா செலவில் இருமாடி கட்டிடங்கள் அமைக்க கல்வி அமைச்சு நிதியுதவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரி பாடசாலை இன்றைய காலகட்டத்தில் காரைநகரில் உள்ள ஆரம்ப பாலர் பாடசாலைகளில் முதன்மை தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. 5ம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படும் இப்பாடசாலையே முற்றும் முழுதான கணணி பிரிவினை கொண்டதாகவும், ஆரம்ப கல்வி கற்றும் மாணவர்கள் அவற்றை பயன்படுத்தவும் பயன்பெற தக்க வகையிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அறியப்டுகின்றது.

கல்வி அமைச்சின் உதவியுடன் முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறைகள் அமைப்பதற்கு உதவி வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை சுற்று வேலி அமைப்பதற்கு வெளிநாட்டு தன்னார்வ அமைப்பு ஒன்று உதவியளிக்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் E.சரவணபவன் அவர்களால் தளபாடங்கள் அன்பளிப்பு



கடந்த மார்ச் மாதம் சிவகாமி அம்மன் கோயியடியில் அமைந்துள்ள காரை மத்தி மேம்பாட்டு கழகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து E.சரவணபவன் அவர்களால் ஒரு தொகை தளபாடங்கள் வழங்கப்பட்டன.

## "காரைநகர் வரவேற்கிறது" அலங்கார வளைவிற்கு அத்திவாரம் இடப்பட்டது

ஏப்ரல் 4ம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் அவரது காரைநகர் பிரதேச இணைப்பாளர் க.பாலச்சந்திரன் மற்றும் உதவி அரசாங்க அதிபர் R.T ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

விஜயகலா மகேஸ்வரனின் 15 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காரைநகர் புன்னாலை பாலம் தொடக்கத்தில் மண் றோட்டிற்கு அண்மையாக மேற்படி அலங்கார வளைவு அமையவுள்ளது. இவ் வரவேற்பு வளைவானது காரைநகர் கலாச்சாரத்தையும் பண்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் கட்டப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் மனதில் நீண்டகாலம் இப்பணியை செய்வதற்குரிய திட்டம் இருந்ததாகவும், அதனை அவரது நினைவாக தான் அமைத்து தருவதில் பெருமை கொள்வதாகவும் அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்து கொண்ட விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.





"எனது ஊர் காரைநகர்"
இக்காலாண்டு சஞ்சிகை உங்களிற்கு
அஞ்சல் மூலம் இலவசமாக
இதுவரை கிடைக்கவில்லையா?
உடனடியாக அழைத்து அறியத்தாருங்கள்
முற்றிலும் இலவசமாக உங்களிற்கு
அனுப்பி வைக்கப்படும்

**தொலைபேசி இலக்கம்**
**416 821 8390**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா



கருங்காலி முருகமூர்த்தி கோயில் தேர்திருவிழா ஏப்ரல் 17ம் திகதி நடைபெற்றது



**பாலாவோடை முத்துமாரி அம்மன் கோயில்**

மே 17ம் திகதி பாலாவோடை முத்துமாரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. மேற்படி கோயிலில் கடந்த 15 வருடங்களிற்கு மேலாக பூஜை செய்து வந்த கு.சண்முகராஜக்குருக்கள் ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் பலவந்தமாக கோயில் நிர்வாகத்தினால் விலத்தப்பட்டார். யுத்த சூழ்நிலைகளின் போது உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் அமைந்திருந்த இக்கோயிலில் அதே வளாகத்தில் தங்கியிருந்து கிரமம் தவறாது நித்திய பூஜை ஆற்றிவந்த கு.சண்முகராஜக்குருக்கள் கோயிலில் இருந்து வெளியேறி குடும்பத்துடன் பயிரிக்கூடலில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு தங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







**மணற்காடு முத்துமாரி அம்மன் கோயில் தேர்திருவிழா ஏப்ரல் 2ம் திகதி நடைபெற்றது**

ஏப்ரல் 14ம் திகதி சித்திரை புதுவருட தினத்தை முன்னிட்டு விளானை முன்பள்ளி மற்றும் விளானை கிராம அபிவிருத்தி சபை ஒன்றிணைந்து சிறுவர்களிற்கான விளையாட்டு போட்டிகளையும் கலைநிகழ்வுகளையும் பகல் மற்றும் இரவு நிகழ்ச்சிகளாக நடாத்தியது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்து கொண்டார். அத்துடன் "இசை நிலா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்குழுவின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது. வியாவில் சனசமூக நிலையத்தினரால் வியாவில் ஐயனார் கோயில் முன்றலில் உறியடி உற்சவமும் நடாத்தப்பட்டது.





## வாரிவளவு பிள்ளையார் கோயில் தேர்திருவிழா

சித்திரை புத்தாண்டு தினத்தன்று வாரிவளவு பிள்ளையார் கோயில் தேர் திருவிழா நடைபெற்றது.





## யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் பதவி உயர்வுடன் இடமாற்றம்

கடந்த வருடம் 2010 யூன் மாதம் 16ம் திகதி மேற்படி பாடாசாலையில் அதிபராக பதவியேற்றுக்கொண்ட காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் தி.சோமசேகரம் அவர்கள் ஒரு வருடத்திற்குள்ளாக பதவி உயர்வை ஏற்றுக்கொண்டு ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரியாகஇடமாறிச் சென்றுள்ளார். காரைநகரில் கல்விமான்களிற்குள் ஏற்பட்டுள்ள புகைச்சல் காரணமாகவும், தனது செயற்பாடுகளிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தடைகளை ஏற்படுத்தி கல்விச்சபைக்கு அநாமதேய முறைப்பாடுகளையும் அளித்து வந்துள்ளதாலும் காரை மண்ணிற்கும் மக்களிற்கும் சேவை செய்ய முடியாது இடையிலேயே விட்டுச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி அதிபர் கனடா காரை கலாச்சார மன்றத்தின் இணையத்தளத்திற்கு தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிக்கான விளையாட்டு போட்டியில் யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள் கலந்து கொண்டார்.

ஏப்ரல் 9,2011 அன்று நடைபெற்ற இறுதிநாள் சுவட்டு நிகழ்ச்சிகளின் போதும் பரிசளிப்பு நிகழ்வின் போதும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள். அத்துடன் யாழ் மாவட்ட விளையாட்டுதுறை ஆணையாளர் A.S ரூபசிங்க, E.S.P நாகரட்ணம் மற்றும் காரை இந்து அதிபர் பொன் சிவானந்தராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.







- தேசிய சேமிப்பு வங்கியினால் 2011 Feb 14ம் முதல் ATM தானியங்கி பணமாற்று இயந்திரம் காரைநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- கனடா-காரை கலாச்சார மன்றத்தின் ரவி ரவீந்திரன் தலைமையிலான நிர்வாக சபை தங்களது பதவி காலத்தை மேலும் இரண்டு வருடங்கள் நீட்டித்துக் கொண்டது. 2013 வரை.

- ஊரியில் இறாள் வளர்ப்பு முதற்கட்டம் பெரும் இலாபம், அடுத்த கட்டமாக மேலும் 75,000 இறாள் குஞ்சுகள் விடப்பட்டன.

- வியாவில் ஐயனார் கோயில் உள்வீதி சுற்று மண்டபம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.


- மணற்காடு முத்துமாரி அம்மன் கோயிலில் அமைந்துள்ள "மகேஸ்வரன் தர்மசுரபி" மண்டபத்தில் விஜயகலா மகேஸ்வரன் ஆதரவில் தையல் பயிற்சி வகுப்புக்கள் 17.02.2011 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடனடி செய்திகள் காரைநகரில் இருந்து தினம் தினம் எடுத்து வரப்படுவதோடு, உண்மையினை உள்ளபடி சொல்லவும் ஒரு இணையத்தளம் உண்டெனில் அது

## www.karainews.com

## இணையத்தளம் மட்டுமே!

### 2010 க.பொ.த சாதாரண தரப்பரீட்சை ஆங்கில மீடியத்தில் காரை மாணவன் தீவக வலயத்தில் முதலிடம்



தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மாணவன் நித்தியானந்தன் தவறுஞ்சன் 7A, 2B (சுப்பிரமணியம் வீதி, முத்தையாவின் பேரன்) பெறுபேறுகளைப் பெற்று தீவக வலயத்தில் முதலிடத்தில் தேர்வாகியுள்ளார். மேலும் சண்முகநாதன் தினேஸ்குமார்(சின்னாலடி) 6A, 1B, 2C, திருப்புகழூர்சிங்கம் கஜீவன் 4A, 3B, 2C ஆகியோர் சிறந்த பெறுபேறுகளை ஆங்கில மீடியத்தில் பெற்றவர்களாவர்.

தமிழ் மீடியம் மூலம் பரீட்சை எழுதியவர்களில் தியாகராஜா நிசாந்தன்(S.M கேணியடி) 4A, 3B, 2S, நற்குணராசா பத்மமேனன்(மல்லிகை) 4A, 3B, 1S பெற்று சிறந்த பெறுபேறுகளை பெற்றவர்களாகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 30, 2011 அன்று நடைபெற்ற 'காரை கிட்ஸ் பார்க்' பாலர் பாடசாலை ஆண்டு விழா

கலந்து கொண்டவர்களை பிரமிப்பில் ஆழ்த்தியது 'காரை கிட்ஸ் பார்க்' பாலர்களின் கலைவிழா. அதனை சிறப்பாக நெறிப்படுத்தியது நிர்வாகம்.



பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் காரைநகர் பிரதிநிதி க.பாலச்சந்திரன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் தி.சோமசேகரம், பிரபல வர்த்தகர், "கல்விக் காருண்யன்" திரு.E.S.P.நாகரட்ரனம் மற்றும் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள் கலந்து கொண்டனர்.



வியஜகலா மகேஸ்வரன் சார்பில் கலந்து கொண்ட காரைநகர் இணைப்பாளர் க.பாலச்சந்திரன் காரை கிட்ஸ் பள்ளிக்கு கணணி அன்பளிப்பு செய்தார்.

விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண கல்வி பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் உரையாற்றுகையில் ஆங்கில மொழியின் தேவையறிந்து அதனை ஆரம்பம் முதலே கற்பிக்க எடுத்து வரும் முயற்சி பாரட்டத்தக்கது எனவும், இப்பாலர் பாடசாலையின் ஆரம்பநாள் விழாவில் கலந்து கொண்ட போதே இப்பாலர் பாடசாலையின் முக்கியத்துவம் பற்றி தெரிந்து



கொண்டதாகவும் அதனை கடந்த இரண்டு வருடங்களில் நிறைவேற்றி வருவதாகவும், ஆங்கில மொழியுடன் கூடிய பாலர் கல்வியே இனிவரும் காலங்களில் முன்னெடுக்கப் படவேண்டும் எனவும், இப்பாடசாலை காரைநகரில் மட்டுமன்றி மற்றைய இடங்களிற்கும் முன்மாதிரிய திகழும் என்பதில் சந்தேகம் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.





கலந்து கொண்டு சிறப்புரையாற்றியவர்கள் பாலர்களின் கலை நிகழ்வுகளை கண்டு கொண்டு அதன் மூலம் அதனை பயிற்றுவித்த ஆசிரியர்களினதும், நிர்வாகத்தினரின் முயற்சிகளையும் மனம்திறந்து பாராட்டியதுடன் இப்பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்கள் பலவித தகமைகளையும் கொண்டு விளங்குவதை காணக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்கள்.

(மேலும் படங்கள் 24ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரில் காரைநகர் பாடசாலைகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள்

**திக்கரை திருச்செந்தூரன் முன்பள்ளி விளையாட்டு போட்டி - மார்ச் 18**







காரைநகர் சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் திரு. T.சசிக்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சத்தியபாமா ரங்கநாதன், திக்கரை முருகமூர்த்தி கோயில் பிரதமகுரு கே.பவானந்தசர்மா, கிராம சேவையாளர் திருமதி தி.பாலாம்பிகை ஆகியோரும் கலந்து கொண்டனர். முன்பள்ளியின் ஆசிரியைகள் து.ரஜிதா மற்றும் பரராஜசிங்கம் டாகினி அவர்களின் பயிற்றுவித்தலில் சிறுவர்கள் சிறப்புடன் இவ்விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

**தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலாய விளையாட்டு போட்டிகள் - மார்ச் 22**

வித்தியாலய அதிபர் திருமதி மங்களேஸ்வரி தேவராஜா தலைமையில் நடைபெற்ற விழாவிற்கு பிரதம விருந்தினராக காரை உதவி அரச அதிபர் R.T.ஜெயசீலன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக காரை கோட்டக்கல்வி பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன்





அவர்களும் ஓய்வுபெற்ற அதிபர் க.தில்லையம்பலம் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக தோப்புக்காடு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் இ.ஜெயராமன், காரை தெற்கு கிராமசேவையாளர் திருமதி பா.நீலகண்டன், தோப்புக்காடு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கு.சரவணபானந்தசர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**காரை இந்து விளையாட்டு போட்டி – மார்ச் 5**

பிரதம விருந்தினர்களாக Dr.S.சிவநாதன்(விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள வடமாகாண பணிப்பாளர்)



சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் அவரது பாரியார் Dr. ஏ.சிவநாதன்( Senior Medical Officer General Hospital Vavuniya) ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாக பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் பிரதானகுரு சிவசிஸ்ரீ சண்முகபவானந்த குருக்கள்.







காரைநகர் EPDP பொறுப்பாளர் திரு.ரஜனி, ஓய்வு பெற்ற அதிபர், மணிவாசகர் சபை பரீட்சை செயலாளர் திரு.தில்லையம்பலம், திரு.எஸ்.நேசேந்திரன;(V.C.E.S.N Traders உரிமையாளர் மற்றும் துறைமுகம் கிட்டங்கி பிள்ளையார் கோயில் தர்மகத்தா), காரைநகர் அபிவிருத்தி சபை செயலாளரும், ஈழத்து சிதம்பரம் அடியார் சபை தலைவரும், கல்லூரியின் பழைய மாணவரும், பிரபல வர்த்தகருமான திரு.இ.ஜெயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வருடம் முதன் முறையாக நடைபெற்ற உடற்பயிற்சி கண்காட்சி பார்வையாளர்களை மிகவும் கவர்ந்து கொண்டது. பல வருடங்களின் பின்னர் அதிக பார்வையாளர்கள் கலந்து கொண்ட விளையாட்டு விழாவாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை விளையாட்டுப்போட்டி - பெப்ரவரி 28**

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக வைத்திய அதிகாரி S.சுவாமிநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் கோட்டக்கல்வி அதிகாரி திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன், ஓய்வுபெற்ற அதிபர்



திருமதி.ச.ரங்கநாதன், காரை அபிவிருத்தி சபை பொருளாளர் த.சற்குணராஜா அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதான குரு சிவஸ்ரீ சண்முகராஜ குருக்கள் அவர்களும் கலந்து கொண்டனர்.

**மெய்கண்டான் வித்தியாசாலை விளையாட்டு போட்டி – பெப்ரவரி 12**

பாடசாலை அதிபர் திருமதி சந்திரராசா புஸ்பராணி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் கோட்டக்கல்வி அதிகாரி



பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக காரை இந்து கல்லூரி அதிபர் பொன் சிவனாந்தராஜா, யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் தி.சோமசேகரம், தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திருமதி தேவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**சுப்பிரமணியம் வித்தியாசாலை விளையாட்டு போட்டி – பெப்ரவரி 19**

பிரதம விருந்தினராக முன்னாள் கணித, விஞ்ஞானபாட ஆசிரியரும் கிராம சேவகருமான திரு.இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக காரை இந்து அதிபர் திரு.பொன் சிவானந்தராஜா, பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.சபாலிங்கம் அவர்களும் கலந்து கொண்டனர்.

**காரைநகர் கோட்ட மட்டத்திலான விளையாட்டு போட்டி – மார்ச் 11**

காரைநகர் தனியான கோட்ட வலயமாக பிரகடனப்படுத்தப் பட்டதன் பின்னர், முதலாவது முறையாக காரைநகர் கோட்ட மட்டத்தில் நடந்த விளையாட்டு போட்டிகளில் காரைநகர் பாடசாலைகள் பங்கேற்றன. காரை கோட்ட கல்வி அதிகாரி திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமை யில் இடம்பெற்ற இப்போட்டிகளில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திரு.ந.பரமசிவம் அவர்களும் முன்னாள் யாழ்ற்ரன் கல்லூரி ஆசிரியர் திரு.நவரட்ணம் அவர்களும் கலந்து கொண்டனர்.இவ்விளையாட்டு போட்டியில் 615 புள்ளிகளை பெற்று தியாகராஜா ம.ம.வித்தியாலயம் முதலாவது இடத்தையும், 339 புள்ளிகளைப் பெற்று யாழ்ற்ரன் கல்லூரி இரண்டாவது இடத்தையும், 117 புள்ளிகளை பெற்று சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை மூன்றாம் இடத்தையும், 60 புள்ளிகளை பெற்று வியாவில் சைவ வித்தியாசாலையும், 18 புள்ளிகளைப் பெற்று ஊரி அ.மி.த.க பாடசாலையும் தமது திமைகளை வெளிப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் முன்னேற்றத்திற்கு உதவுவார்களா ஊரவர்கள்?

காரைநகர் பிரதேசத்தில் பற்றைகளாகக் காணப்படும் காணிகளினால் இங்கு வசிக்கும் மக்களின் அன்றாட வாழ்வில் பாரிய தாக்கம் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக காரைநகரில் சொந்தக் காணிகளையும் வீடுகளையும் வைத்துக்கொண்டு காரைநகருக்கு வெளியே உலகு எங்கும் பரந்து வாழ்வோர் காரைநகரில் தற்போது வசிப்பவர்களின் வாழ்வியலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றமை வேதனை அளிப்பதாக இங்குள்ளோர் கவலை தெரிவிக்கின்றனர்.

காரைநகரில் 75 வீதமான வீடுகள் மற்றும் வளவுகளின் சொந்தக்காரர்கள் காரைநகரில் வசிப்பதில்லை. அவர்களுடைய வீடுகளும் காணிகளும் அனேகமானவை காடு மண்டிக் கிடக்கின்றன அவற்றுக்கு அயலில் வசிப்பவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்களின் பாதிப்புக்களைத் தணிக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்

தற்போது காரைநகரில் வசித்து வருவோர் எதிர்கொண்டு நிற்கும் பிரச்சினைகளை நோக்குவோமானால் காரைநகரில் வசிக்காது வீடுகளையும் வளவுகளையும் வைத்திருப்போர் அவற்றினை துப்புரவு செய்வதில்லை. அவற்றைத் துப்பரவு செய்யக்கூட அயலவர்களை அனுமதிப்பதில்லை. அதனால் அவை காடுமண்டிக் கிடக்கின்றன. இவ்வாறு காடுமண்டி பற்றைகளாகக் காணப்படுவதனால் விசயந்துகள், மரநாய், மயிர்கொட்டி, நுளம்புகள், எனப்பலதரப் பட்டவையும் இங்கு உற்பத்தியாகி அயலில் உள்ளவர்களை படாதபாடு படுத்தி வருகின்றமை கவலை அளிக்கின்றது.

இதனால் ஆட்கள் அற்ற வீடுகளுக்கு அயலில் வசிப்பவர்கள் நுளம்புப் பெருக்கத்தினால் நோய்களை எதிர்நோக்குவதுடன் மரநாய் பாம்பு போன்ற விசயந்துகள் அங்கு குடிகொண்டு கால்நடைகளைக் கடித்துக் குதறுகின்றன அடர்ந்த மரங்களில் பெருக்கெடுக்கும் மயிர்கொட்டிகள் அயலவர்களையும், அவர்கள் குழந்தைகளையும் பதம் பார்க்கின்றன. அத்துடன் ஆட்கள் அற்ற வீடுகளை திருடர்களும், சமுகச் சீரளிவில் ஈடுபடுபவர்களும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு சொல்லனாத் துன்பங்களை காரைநகரில் தற்போது வாழ்பவர்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளினால் இங்கு வசிப்பவர்கள் பாரிய இடர்பாடுகளை எதிர் நோக்குவதுடன் வாழ்வில் முன்னேற முடியாது துடிக்கின்றனர். காரைநகருக்கு வெளியில் வாழ்பவர்கள் இங்குள்ள காணிகளை துப்பரவு செய்வதை விடுத்து அவற்றுக்கு யானைவிலை, குதிரைவிலை கூறித்திரிகின்றனர். இங்குவாழ்பவர்களின் கற்பனைக் கெட்டாத விலைகளை கூறுபவர்கள் அந்தக் காணிகளை துப்பரவு செய்யப் பின்நிற்கின்றனர். அயலவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தங்கள் பாதுகாப்பிற்காக துப்புரவுசெய்ய முயன்றால் அவர்களை மிரட்டவும் விரட்டவும் செய்கின்றனர்.

காரைநகர் பாலாவோடை, விளானை, துறைமுகம், பலகாடு நீலங்காடு, கோவளம், போன்ற இடங்களில் ஒரு சில குடும்பங்களே வாழ்வதுடன் அப்பிரதேசங்கள் காடுமண்டிக் காணப்படகின்றன. அங்கு பெறுமதிமிக்க பெரிய வீடுகள் பல பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. இப்பிதேசங்களில் மக்கள் மீளக்குடியேற தயக்கம் காட்டியே வருகின்றனர். ஏனைய பிரதேசங்களில் ஓரளவு மக்கள் வசித்து வந்தாலும் அயல் காணிகள் பல ஆட்கள் அற்றவையாகவே காணப்படுகின்றன. அவற்றினால் அவர்கள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்.

## மயிர்கொட்டிகளின் பெருக்கம்

காரைநகரில் வகைதொகை இன்றி பெருகி வரும் மயிர் கொட்டிகளினால் நாளாந்தம் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்களுடைய இல்இடங்களைத் துப்பரவு செய்திருந்தாலும், அயல் காணிகளில் வளர்ந்து நிற்கும் பூவரசு போன்ற மரங்களில் பெருக்கெடுத்திரக்கும் மயிர் கொட்டிகள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரைப் பதம்பார்த்து வருகின்றது.

வீதிகளில் இரு மருங்கும் அடர்ந்து வளர்ந்துள்ள பூவரசம் மரங்களில் இருந்தும் இறங்கும் மயிர் கொட்டிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் வீதியால் செல்வோர்கள் மீது பட்டு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. அதனால் அந்த மாணவர்கள் பாடசாலை செல்லாது வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி மயிர்கொட்டிகள் பாடசாலைகள், அலுவலகங்கள், வர்த்தகநிலையங்கள் என்பவற்றையும் விட்டு வைப்பதாக இல்லை இதனால் மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

## டெங்கு நோய்த் தாக்கம்.

நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் டெங்கு நோயை காரைநகர்ப் பிரதேசத்திலும் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். குடியிருக்கும் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வீடு வளவுகளைப் பரிசோதிப்பதுடன் நீர் தேங்கி நிற்கும் இடங்கள் பிளாஸ்ரிக் பொருட்கள் என்பவற்றை அகற்றுமாறு அறிவுறுத்துவதுடன், தவறும் பட்சத்தில் குற்றப்பணம் அல்லது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகி ன்றது. எனினும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. துப்புரவு செய்யப்படாமல் கிடக்கும் அயற் காணிகளும் அங்கு உடைந்த நிலையில் காணப்படும் மலசலகூடக் குழிகளும் காரணமாக அமைகின்றது.

## விசஜந்துகளின் பெருக்கம்

காடுமண்டிக் கிடக்கும் காணிகளில் விசஜந்துகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றுக்குள் ஒழிந்திருக்கும் கட்டாக்காலி நாய்களும் மரநாய்களும் வீடுகளில் வளர்க்கப்படும் ஆடுகள், மற்றும் கோழிகள் என்பவற்றைக் கடித்துக் குதறுகின்றன. இதனால் இங்குள்ளவர்கள் சுயதொழிலுக்காக இவற்றினை வளர்க்க முடியாத நிலை காணப்படுகின்றது. அதே போல பற்றைகளாகக் கிடக்கும் காணிகளில் பாம்பு போன்ற விசஜந்துகள் பெருக்கெடுத்து பக்கங்களில் உள்ள வீடுகளுக்குள் புகுவதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இவ்வாறு காரைநகரில் சொந்த நிலபுலங்களை வைத்துக்கொண்டு அவற்றினை துப்புரவு செய்யவோ பராமரிக்கவோ முடியாமல் காரைநகருக்க வெளியே வாழ்கின்ற உத்தமர்கள் காரைநகரில் உள்ள பொது அமைப்புக்களை நிர்வகிப்பது அவற்றின் உயர் பதவிகளை அபகரிப்பதும் தொடர் கதையாகவே உள்ளது. அதுமட்டுமின்றி இங்குள்ள ஆலயங்களில் பெரும் தொகை நிதியினை இறைத்து பல கூட்டம் மேளம் பிடித்து திருவிழாக்களை நடத்துகின்றனர். இதனால் உள்ளூரில் உள்ள ஏழை மக்களால் ஆலயங்களை நெருங்கவோ நேர்கடன்களை நிறைவேற்றவோ முடியாத நிலை காணப்படுகின்றது. காரணம் வெளியிடங்களில் இருந்து வந்து அந்தணப் பெருமக்களுக்கு பெருந் தொகைப் பணத்தினை விசுக்கி திருவிழா செய்வதனால் அதே தொகையை இங்குள்ளவர்களிடமும் அந்தணர்கள் எதிர்பார்ப்பதுடன் ஆயிரக்கணக்கான தொகையினை தட்சணையாகக் கேட்பதும் காரணமாக அமைகின்றது.


பண்டைய காலத்தில் எங்கள் ஆலயங்களே கல்விக்கும் கலைகளுக்கும் ஊற்றாக விளங்கியதுடன் சிறந்த நீதி மன்றங்களாகவும் விளங்கின. ஆனால் ஆலயங்களை வைத்து தனிப்பட்டவர்கள் தம்மை ஊரின் செல்வம் நிறைந்த செல்வாக்குள்ளவர்களாகக் காட்டி தமக்குத் தாமே புகழும் பெருமையும் தேடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல அத்தடன் பெரும் பணச் செலவில் ஆலயத்திருவிழாக்களை மற்றவர்களை விடச் சிறப்பாகச் செய்து தமது அந்தஸ்த்தை உயர்த்திக் காட்டவேண்டும் என்று போட்டி போடும் வெளியூர்களில் வாழும் காரைமண் பெற்ற உத்தமர்கள் நெஞ்சைத் தொட்டுப்பார்த்து தமது மனிதத்திடம் வினாத் தொடுத்துப்பார்த்தால் வாழ்க்கையில் பலப் பல வழிகளில் நொந்துபோய் அந்தரிக்கும் எமது இரத்தத்தின் இரத்தங்களுக்காக இதயம் இரங்கவே செய்யும் ஆலயங்களில் அவர்களுக்காக இறைஞ்சுங்கள்.

கடவுளர்கள் போட்டி போட்டு திருவிழாச் செய்யவேண்டும் என்று ஒருபோதும் விளைபவர்கள் அல்ல. மற்றைய மக்களுக்கு உதவுபவர்களுக்கே அவர் அருள் புரிவர். ஈசன் வேண்டுவதும் உயிர்களுக்கான மனிதர்களுக்கான ஏழைகளுக்கான ஈகையே தர்மம் தலைகாக்கும் என்பதனை மனதில் கொள்ளுங்கள் உதவி தேவைப்படும் மக்களுக்கு அதனை வழங்குங்கள், அது கடவுளுக்கு ஆயிரம் தடவை சிறப்பு ஆராதனை செய்வதற்கு ஒப்பாகும். ஒருமுறை உங்கள் மனங்கனை நீங்களே தட்டிக்கேளுங்கள், ஊரில் வசிப்போரின் முன்னேற்றத்திற்கு வழிவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் சமுர்த்தி வங்கியின் புதுவருட கொண்டாட்டமும் விளையாட்டு போட்டிகளும்



ஏப்ரல் 23ம் திகதியன்று காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த புதுவருடதின சமுர்த்தி கொண்டாட்டங்களும் விளையாட்டு வைபவமும் மிகவும் சிறப்பான நடைபெற்றுள்ளதாக அறியப்படுகின்றது. காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திரு.ரி.சசிக்குமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு யாழ் மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் திரு.அ.இரகுநாதன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு.தி.சோமசேகரம், காரை இந்து அதிபர் திரு.பொன் சிவானந்தராசா, காரை அபிவிருத்தி சபை தலைவர் க.சோமசேகரம், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆளணி உதவியாளர் திருமதி அ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சறுக்குமரம் ஏறுதல், சவாரி போட்டி, கிடுகு பின்னல், தேங்காய் திருவல் போன்ற பழந்தமிழர் விளையாட்டுக் களிலும் மற்றைய போட்டிகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் வெகுஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அத்துடன் பார்வையாளர்களாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட காரை மக்கள் கலந்து கொண்டு பார்த்து ஆதரவு அளித்துள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலம் என்றால் இந்தியாவில் சிதம்பரம் அதேபோல் இலங்கையில் ஈழத்துச் சிதம்பரம்

*— இந்துநாகரீகத்துறை பேராசிரியர் ம.வேதநாதன்*

தலம் என்றால் அது இந்தியாவில் சிதம்பரத்தையே குறிக்கும் அவ்வாறு இலங்கையில் தலம் என்பது ஈழத்துச்சிதம்பரத்தையே குறிக்கவேண்டும். தமிழ் நாட்டுச் சிதம்பரத்தையும் ஈழத்துச் சிதம்பரத்தையும் ஒப்பிட்டு இந்த நூல் வெளியிடப்படுவது பாராட்டத்தக்க தாகும். இவ்வாறு ஓய்வு பெற்ற அதிபர் சி.பொன்னம்பலம் எழுதிய தில்லைச்சிதம்பரமும் ஈழத்துச்சிதம்பரமும் என்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ம.வேதநாதன் தெரிவித்தார்.

ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவ தேர்த் திருவிழா அன்று நடைபெற்ற இந்த விழாவில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில்
தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்தில் நடைபெறுவது போன்றே மகோற்சவக் கிரியைகளும் பஞ்சரத பவனியும் இலங்கையில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற ஒரேஒரு ஆலயம் ஈழத்துச் சிதம்பரமாகும். சைவமக்கள் வாழ்க்கையில் ஒரு தடவையாவது சிதம்பரம் சென்று நடராஜப்பெருமானைத் தரிசிக்க வேண்டும். தலம் என்றால் அது இந்தியாவில் சிதம்பரத்தையே குறிக்கும். அவ்வாறு இலங்கையில் தலம் என்பது ஈழத்துச் சிதம்பரத்தையே குறிக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள மக்கள் வழிபடுவதற்கு சிதம்பரம் சிறப்புப் பெற்றிருப்பதைப் போல இலங்கையில் மக்கள் வழிபடுவதற்கு சிறப்பான தலமாக ஈழத்துச் சிதம்பரம் விளங்குகின்றது. இந்தியா சென்று சிதம்பரத்தில் வழிபாடு செய்ய முடியாதவர்கள் இலங்கையின் வடபால் அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானைத் தரிசிப்பதன் முலம் சிதம்பர நடராசனைத் தரிசித்த பேற்றினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கூறினார்.

நூல் மதிப்புரை நிகழ்த்திய யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா தனதுரையில்.

புலவர்மணி சோ.இளமுருகனாரின் ஈழத்துச்சிதம்பர புராணம் வெளிவந்து நான்கு தசாப்தங்களின் பின்னர் நல்ல தரமான நூலாக "தில்லைச்சிதம்பரமும் ஈழத்துச்சிதம்பரமும்" வெளிவந்துள்ளது. இந்நூலில் தமிழகத்துச் சிதம்பரம், ஈழத்துச் சிதம்பரம் பற்றிய வரலாறுகள் மட்டுமன்றி காரைநகர் பற்றியும் காரைநகரில் உள்ள ஆலயங்கள் பற்றியும் திருவாசக இயல் பற்றியும் சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

சங்கநூற் செல்வர் அருளம்பலவாணர் காரைநகர் மான்மியம் எழுதிய எவ்.எக்ஸ்.சி.நடராசா, கார்த்திகேயப் புலவர் போன்ற பெரியார்கள் தோன்றிய இந்த மண்ணில் பிறந்த ஓய்வு பெற்ற அதிபர் கவிஞர் சி.பொன்னம்பலம் இந்த நூலை அழகாக தொகுத்து எழுதியிருக்கிறார்.

கோயில் என்று சிறப்பிக்கப்படும் சிதம்பரத்தையும் ஈழத்துச் சிதம்பரத்தையும் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு அரிய வாய்ப்பாக இந்நூல் அமைந்துள்ளது. சைவ சமயத்தவர் கள் அனைவரது இல்லங்களிலும் இருக்கவேண்டிய நூல். குறைந்த விலையில் மிகவும் தரமாகத் தயாரிக்கப்பட்ட இந்நூலின் முலம் கிடைக்கும் வருமானம் ஆலய திருப்பணி வேலைகளுக்குப் பயன்படுத்துவது போற்றத்தக்கது என்றார்.

## காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்தை மாகாண ஆளுநர் திறந்து வைத்தார்

காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களினால் டிசெம்பர் 27ம் திகதி 2010 திங்கட்கிழமை அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.




காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் கோட்டக் கல்வி அலுவலகம் அமைந்துள்ளது. இந்நிகழ்வில் அரச நாடாளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் மு.சந்திரகுமார் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முன்னதாக வலந்தலைச் சந்தியில் இருந்து விருந்தினர்கள் மங்கள வாத்தியம் மற்றும் மாணவர்களின் பாண்ட் அணிவகுப்புடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். கல்லூரி மாணவிகள் தமிழில் தேசியகீதம் இசைக்க ஆளுநரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

வடமாகாணத்தில் 34ஆவது கல்விக் கோட்டமாக அமைக்கப்பட்ட காரைநகர் கல்விக் கோட்டப் பணிப்பாளராக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய



பு.ஶ்ரீவிக்கினேஸ்வரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

## காரைநகரில் முடப்பட்டிருக்கும் பாடசாலைகளைத் திறக்க வேண்டும்

**தியாகராசா ம. ம. வி. அதிபர் உரை**

காரைநகரில் இயங்காமல் முடப்பட்டிருக்கும் ஏனைய பாடசாலைகளையும் விரைவாகத் திறந்து கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும். மிக விரைவில் அபிவிருத்தி பாதையை நோக்கிச் செல்லும் காரைநகருக்கு பாடசாலைகளின் மீள் ஆரம்பம் உந்துசக்தியாக அமையும். இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலய அதிபர் பொ. சிவானந்தராஜா.



காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயம் கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்த மீள்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேற்படி பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிபர் திருமதி மங்களேஸ்வரி தேவராசா தலைமையில் நடைபெற்ற மீள்திறப்பு விழாவில் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி கே.பாஸ்கரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.ஶ்ரீவிக்கினேஸ்வரனால் நாடாவெட்டி பாடசாலை மீளத்திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினம் 40இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலையில் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்தக் கிராமப் பிள்ளைகள் நீண்டதூரம் சென்று கல்வி கற்கும் அவலநிலை இன்றுடன் நீங்கிவிட்டது. இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இருபது வருடங்களுக்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் வரலாறு அழிந்து போகாமல் ஆவணப்படுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் இப்பாடசாலை புகழ்பூத்த ஆசிரியர்களையும் சிறந்த விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி உள்ளது. இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு இப்பாடசாலை நிச்சயம் உதவும்.

மேலும் காரைநகரில் 14 பாடசாலைகள் உள்ளபோதிலும் எட்டுப் பாடசாலைகளே இயங்குகின்றன இதே போன்று ஏனைய பாடசாலைகளும் மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நலன் விரும்பிகளும் முன்வரவேண்டும் என்றார். இந்த நிகழ்வில் காரைநகர் பிரதேச பாடசாலை அதிபர்கள், கடற்படை அதிகாரிகள் பெற்றோர், பழைய மாணவர்கள் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பயிரிக்கூடலில் சங்கீத கதாப்பிரசங்கம்

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் கொடியேற்ற தினமான ஜனவரி 10இல் ஆலய மண்டபத்தில் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெற்றது.

முருகன் பெருமை என்னும் தொனிப்பொருளில் இடம் பெற்ற சங்கீத கதாப்பிரசங்கத்தில் சப்ரகமுவாப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், சுண்ணாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசை ஆசிரியர் கலாவித்தகர் சி.சிவஞானராசா ஆகியோர் பிரசங்கம் நிகழ்த்தினர்.

ஜனவரி 10இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவத்தில் ஜனவரி 18 இல் இரதோற்சவமும் தைப்பூசத் தினமான ஜனவரி 19 இல் தீர்த்த உற்சவமும் சிறப்புற இடம்பெற்றது. இந்த உற்சவங்களில் பெருந் திரளான பத்தர்கள் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவக வலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

தீவக வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழா தீவகக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்று. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகழ்வில் மேலும் உரையாற்றுகையில்

காரைநகருக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனை 2003இல் அமரர் மகேஸ்வரனின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. அப்போதே தனியான கல்விக் கோட்டமும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் இன்றுதான் இந்த முயற்சி கைகூடுகின்றது. வடமாகாணத்தில் உள்ள 33 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கல்விக் கோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 34ஆவது கல்விக் கோட்டமாக காரைநகர் கல்விக் கோட்டம் அமைகின்றது.

காரைநகர் பாடசாலைகளின் தேவைகள், பிள்ளைகளின் தேவைகள் பற்றி விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு காரைநகர் உதவி அரச அதிபரிடம் ஆளுநர் தெரிவித்துள்ளார். ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகவும் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பேற்றோர்களின் பங்களிப்பு மற்றும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எமது பிரதேசத்தவர்களின் பங்களிப்பும் நிறைவான கல்வியை வழங்க உதவவேண்டும் என்றார்.

வடமாகாண ஆளுநர் மேஜர்.ஜி.ஏ.சந்திரசிறி கோட்டக் கல்வி அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும் போது அரசு ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்தில் 114 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன அதில் காரைநகரில் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பிள்ளைகளின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளின் பெறுபேறுகள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு பாடசாலை சமூகம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். காரைநகர் கோட்டக் கல்வி அலுவலக புனரமைப்புக்காக பத்து லட்சம் ரூபா ஆளுநர் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரியின் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தைப் புனரமைப்பதற்காக முதற்கட்டமாக பத்து இலட்சம் ரூபா நிதி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

கோட்டக்கல்வி அலுவலகத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அரச நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாற்றுகையில் தீவகப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்றது. இதனால் தீவுப்பகுதி மாணவர்கள் யாழ்நகர்ப் பாடசாலைகளை நோக்கி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மாற்றியமைத்து தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வியும் கடந்த சில வருடங்களாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. இதனை நாம் மாற்றியமைக்க வேண்டும். இந்தநிலையை நிவர்த்தி செய்ய மாகாணக் கல்வி அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும் என நினைக்கிறேன் அதற்கு நாமும் உறுதுணையாகச் செயற்படுவோம்.

காரைநகருக்கு தனியான கல்விக் கோட்டம், பிரதேச செயலகம், பிரதேச சபை கமநல சேவைகள் நிலையம் உள்ளிட்ட பெரும்பாலான அலுவலகங்கள் அமைக்கப்பட் டுள்ளன. அத்துடன் மின்சாரசபை கடற்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் உபஅலுவலகங்களையும் இங்கு அமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மின்சாரசபை கடற்தொழில் திணைக்களம் என்பவற்றின் உபஅலுவலகங்களை இங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

தலைமை உரையாற்றிய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிஸ்ணன் தனது உரையில்: காரைநகரில் 14 பாடசாலைகள் இருக்கின்ற போதிலும் எட்டுப் பாடசாலைகளே இயங்குகின்றன. ஏனைய பாடசாலைகளையும் படிப்படியாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

காரைநகரில் இரு பாடசாலைகள் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் இனைக்கப்பட்டுள்ளது. ஒரு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு கோட்டக் கல்வி அலுவலகம் இன்றி அமையாதது காரைநகரின் கல்வி அபிவிருத்திக்கு இந்தக் கல்விக்கோட்டம் உறுதுணையாக அமையும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் ஒன்றிற்கு சென்ற முன்பள்ளி மாணவர்களுக்கான பிரிவுபசார விழா





காரைநகர் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளிகளில் கல்வி கற்று தரம் 01 சென்ற மாணவர்களுக்கான பிரிவுபசார விழா ஜனவரி 16இல் காரை இந்துக்கல்லூரியில் இடம் பெற்றது

காரைநகர் பிட்டியெல்லை பேம்பலம் முன்பள்ளி ஆசிரியை திருமதி.கினியோபெட்ரா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் கலந்து சிறப்பித்தார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## "காரைநகர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை வசதி செய்க" பொதுமக்கள் கோரிக்கை

காரைநகரில் பிரதேசத்தில் மரணமானவர்களின் சடலங்களை காரைநகரிலேயே பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு காரைநகர் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
காரைநகரில் அரசினர் வைத்தியசாலை இருந்த போதிலும் பிரேத பரிசோதனைக்குரிய இடவசதியோ ஏனைய வசதிகளோ இல்லாத காரணத்தினால் சந்தேகமான முறையில் இறப்பவர்களின் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதன வைத்தியசாலைக்கு கொண்ட செல்ல வேண்டி உள்ளது. இதனால் பெரும் சிரமங்களையும் காலதாமதங்களையும் சந்திக்க வேண்டி உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் பிரேதபரிசோதனை மேற்கொள்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தள்ளனர்.

## தொழில் நுட்பத்தை சாதகமாக்கி வழி தவறிச் செல்லும் இளம் சமூகம்

-சமுர்த்தி வங்கி முகாமையாளர்
T.சசிகுமார் உரை.

'இன்றைய இளம் சமூகம் தொழில்நுட்ப வளர்ச்சியை சாதகமாகப் பயன்படுத்தி அதில் உள்ள நல்ல விடயங்களை பயன்படுத்துவதோடு தீய விடயங்களையும் தேடி ஆராய்கின்றனர். இதனால் சமூகம் நெறி பிறழ்வு நிலைக்கு உள்ளாகின்ற நிலை ஏற்படவாய்ப்புள்ளது" இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரி.சசிகுமார்.

திக்கரை பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது: குழந்தை ஒன்று பிறந்து தாயுடைய அரவணைப்பிலும், தந்தையினது பாதுகாப்பிலும் வளர்ந்து முதற் தடவையாக குடும்பத்தினருக்கு அடுத்ததாக சந்திப்பது முன்பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும் தான். அதனால் ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய்போல் இந்த ஆசிரியர் மிகவும் பொறுமையோடும் அன்போடும் கல்வியை ஊட்டவேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் எனப் பலவேறு நிலைகளுக்கு வரவுள்ளனர்.

பெற்றோர்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன் பிள்ளைகளை எதிர்காலத்தில் நல்ல கல்விமான்களாக வரவேண்டும் என்ற ஆதங்கத்துடன் அவர்களுக்கு அதிக சுமையைக் கொடுத்து விடாதீர்கள். குழந்தையின் மனங்களைப் பாதிப்படையச் செய்யாதீர்கள். இன்று ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் ஏதோ கௌரவக் குறைச்சல் என்கின்ற நிலை தோன்றி வருகின்றது.

ஒவ்வொரு குடும்பத்தவரும் தங்களுடைய பிள்ளைகள் கல்வி அறிவு உள்ளவர்களாக வரவேண்டும் என்பதோடு நல்ல பழக்கவழக்கம் உள்ளவர்களாக ஆண்மீகப் பற்று உள்ளவர்களாக வரவேண்டும் என்ற நோக்கோடு அவர்களுக்குரிய வழிகாட்டலைச் செய்ய வேண்டும். நல்ல சூழலை அமைத்துக்கொடுத்து பிள்ளைகளோடு மனம் விட்டு கதைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி பிழைகளை சொல்லிக் கொடுக்க வேண்டும் அப்போது தான் நாம் எதிர்பார்த்த இலக்கை முழுமையாக அடையமுடியும் என்றார்.

## 'மாணவர்கள் கீழ்படிந்து நடந்தால் வாழ்வில் உயர்வடைய முடியும்'

காரை இந்து விளையாட்டுப் போட்டியில் மாகாணப் பணிப்பாளர்.

அதிபர் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து மாணவர்கள் நடப்பதன் மூலம் கல்வியில் மட்டுமன்றி வாழ்விலும் உயர்வடைய முடியும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களப் பணிப்பாளர் எஸ்.சிவநாதன்.

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் பொ.சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மாணவர்கள் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் காட்டவேண்டும். விளையாட்டுப் பயிற்சி ஊடாக நல்ல தேகாரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் ஊடாகத் தலைமைத் துவப் பண்பினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

அதிபர் பொ.சிவானந்தராசா தனது தலைமை உரையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் அனேகமானவை புலம் பெயர் நாடுகள் பலவற்றில் பழைய மாணவர் சங்கங்களை கொண்டுள்ளன. இதன் ஊடாக பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. எமது பாடசாலைக்கும் இவ்வாறான சங்கங்கள் இல்லாமை கவலை அளிக் கின்றது புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது பாடசாலை யில் கற்ற மாணவர்கள் பாடசாலைக்கு உதவ முன்வர வேணடும்.

பாடசாலைகளில் நடைபெறும் இணைபாட விதான செயற்பாடுகளில் மிகவும் பெரியது இல்லமெய்வன்மைப் போட்டி. பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பங்குபற்றும் செயற்பாடு இதுவாகும். பழைய மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றக் கூடிய நிகழ்வாகவும் இது அமைகின்றது. அத்துடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் திறமைகளை கண்டு களிக்கக் கூடிய நிகழ்வாகவும் இது காணப்படுகின்றது.

நலன் விரும்பிகள் பாடசாலைக்கு உதவ முன்வந்தால் விளையாட்டுப் போட்டிகளில் மேலும் பல நிகழ்வுகளை இனைத்துக்கொள்ள முடியும். இனி வரும் காலங்களில் கிராமிய விளையாட்டுக்களையும் இணைத்துக்கொள்ள உள்ளோம் என்றார்.

## பிட்டியெல்லை பேரம்பலம் முன்பள்ளிக்கு புதிய கட்டிடம்

பிட்டியெல்லை பேரம்பலம் முன்பள்ளிக்கு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்களின் முயற்சியினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து புதிய கட்டிடம் கிடைக்கப்பெற்றுள்ளது. Feb 18, 2011 அன்று உதயன் அவர்கள் கலந்து கொண்டு மேற்படி கட்டிடத்தை திறந்து வைத்தார்.



## தவில் வித்துவான் N.K வீராச்சாமி அவர்களிற்கு இந்து கலாச்சார அமைச்சு "கலாபூஷணம்" விருது வழங்கியதையடுத்து பாராட்டு

மடத்துகரை அம்மன் கோயிலில் நடைபெற்ற அலங்கார உற்சவ திருவிழாவின் 8ம் திருவிழாவின் போது உபயகாரர் திருவீடியோ உரிமையாளர், மற்றும் கோயில் ஆதினகர்த்தாக்களினால் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் 10 நாட்கள் திருவிழாவின் போது தொடர் சொற்பொழிவாற்றிய திரு.S.கெங்காதரன் .அவர்களிற்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் பொன்னாலை பாலத்தில் தொடரும் விபத்துக்கள்


புதிய அகலப்பாதை திறக்கப்பட்ட பின்னர் ஒரு சில மாதங்களில் இரண்டு பெரிய வாகனங்கள் வீதியில் இருந்து தவறி கடலுக்குள் பாய்ந்துள்ளன. மார்ச் மாதத்தில் லொறி ஒன்றும், மே மாதத்தில் தனியார் பேருந்து ஒன்றும் கடலுக்குள் பாய்ந்துள்ளன. பேருந்தில் இருந்த 23 பயணிகளில் ஏழு பேர் காயங்களுடன் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர்.






## ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன் கோயில் மஹா கும்பாபிஷேகம்

காரைநகர் திண்ணபுரத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும், பூரணை, புட்கலை சமேத ஐயனார் பெருமானினதும், சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானினதும் திருவருட்கிருபையால் பல லட்சம் ரூபா பெறுமதியான திருப்பணி வேலைகள் நடைபெற்று கர வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள் (06-06-2011) திங்கட்கிழமை உதயம் 6:32 மணி முதல் 7:16 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன சம்புரோஹண திரியத்திரிம்சத் (33) குண்ட மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இக்கும்பாபிஷேக வைபவத்தில் இலங்கை, தென்னிந்திய தலைசிறந்த சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள். பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் 04-06-2011 சனிக்கிழமை காலை 7:00 முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணிவரை நடைபெறும்.. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை காரைநகருக்கான பிரதேச கீதம் தாயாரித்துள்ளது.**

**பாடல் ஆக்கம்:**
**புலவர் வே.குமாரசாமி,**
**காரை உதவி அரச அதிபர் த.ஜெயசீலன்**

**இசையமைத்து பாடியவர்:**
**யாழ் பல்கலைக்கழக முதுநிலை இசை விரிவுரையாளர்**
**Dr. ஸ்ரீதர்சனன்**

**இணைந்து பாடியவர்:**
**இசை ஆசிரியை ஸ்ரீமதி நந்தினி உதயகுமார்**

**பின்னணி இசை:**
**திருவாளர் பு. அற்புதன்**

## பிரதேச கீதம் – காரைநகர்

வாழிய வாழிய வாழியவே — காரை
நகர் என்றும் வளமுடன் வாழியவே!
சூழுக இன்பமும், வெற்றியுமே — மாந்தர்
சொர்க்கம் இம் மண்ணென வாழ்ந்திடவே!

ஈழத்துச் சிதம்பர ஆலயமும் - வாழும்
எண்ணற்ற கோவிலின் அதிசயமும்,
கோவளக் கலங்கரை, கசூரினாவும் - சூழ்ந்து
கொழித்திட அலையிடை தவழும் நிலம்!

பெருவயல், கடல் படு திரவியங்கள் - தெங்கு,
பனைவளம், வணிகம், கைத்தொழில் வகைகள்
பரந்து சென்றுழைப்பவர் இடும் முதல்கள் - காரைப்
பதிதனை வளர்த்திடும் பெரும்பலங்கள்!

கலைஞைர்கள், கவிஞர்கள், இசைநிபுணர் - ஞானக்
கல்வியில் சிறந்தவர், உடல் வினைஞர்
தமிழ்ச் சைவந் தளைத்திடத் தமை விதைத்தோர் - தோன்றித்
தனித்துவம், தனிப் புகழ், பொறிக்கும் நகர்!

தருமத்தின் விழுமியம் செழிக்கும் பதி — செல்வம்
தடையின்றிப் பெருகிடும் எளிமை மடி!
குறைகளைந் தெழுந்து இங்கொரு உயர்ச்சி - கண்டு.. எம்
கொடி அசைத்து அடைவோம் நல் அபிவிருத்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகௌரி முன்பள்ளி விளையாட்டு போட்டி

பெரியமணல் சிவகௌரி முன்பள்ளி விளையாட்டு போட்டிகள் ஏப்ரல் 15 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக காரை கோட்டக்கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக காரை இந்து அதிபர் பொன் சிவானந்தராசா அவர்களும் கலந்து கொண்டனர்.





## புதுவீதி Modern Education Centre(MEC) பரிசளிப்பு விழா


மேற்படி விழா April 10, 2011 அன்று நடைபெற்றது. யாழ் மாவட்ட தொலைத்தொடர்பு அதிகாரி S.மோகன்ராஜ் தலைமையில், உதவி அரசாங்க அதிபர் R.T ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், S.V.M.குணரத்தினம் சிறப்பு



விருந்தினராகவும், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி S.நடராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.




## காரைநகர் பிரதேச சபை செயலாளர் இரா லோகநாதன் மறைவு!



காரைநகர் தனியான பிரதேச சபையாக உருவாக்கப்பட்ட பின்னர் கடந்த எட்டு ஆண்டுகளாக பிரதேச சபை செயலாளராக கடமையாற்றிய நயினா தீவை பிறப்பிடமாகக் கொண்ட இரா லோகநாதன் அவர்கள் 19.05.2011 வியாழக்கிழமை சுகயீனம் காரணமாக மரணம் அடைந்தார்.

கடந்த ஒரு வார காலமாக சுகயீனம் காரணமாக யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 19.05.2011 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காரைநகர் மக்களிடத்தில் சேவைக்காலத்தில் நட்பாகவும் நன்மதிப்புடனும் சேவையாற்றி வந்த அன்னாரின் இழப்பால் காரைநகர் பிரதேச சபை ஊழியர்களும் மக்களும் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். பிரதேச சபை காரியாலயத்தில் பிரதேச சபை கொடி அரைக்கம்பத்திலும் மற்றும் பல இடங்களிலும் மக்கள் கறுப்புக்கொடி பறக்கவிட்டு துக்கம் அனுட்டிப்பதாக அறியப்படுகின்றது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் சொந்த இடமான நயினாதீவில் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளாக காரைநகரில் கடமையாற்றி பிரதேச சபை ஊழியர்களினதும், காரை மக்களினதும் நன்மதிப்பை பெற்ற இரா லோகநாதன் அவர்களின் மறைவிற்கு "எனது ஊர் காரைநகர்" சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பரம் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப்பெருமானின் திருவடிகளை வேண்டி நிற்கின்றோம்.

"எனது ஊர் காரைநகர்"
தொகுப்பாளர்காரைநகர்-கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கல்விக் காருண்யன்" E.S.P நாகரட்ணம்



14.02.2011 புதன்கிழமை காலை 10 மணிக்கு காரை இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற இலங்கை செஞ்சிலுவை சங்கம் காரைநகர் கிளை சார்பில் தொண்டர் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார் திரு. E.S.P நாகரட்ணம் அவர்கள். பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் அவர்களும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் கா.குகபாலன் புவியியல் துறை பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம், மற்றும் காரை உதவிஅரசஅதிபர் ஆர்.ரி ஜெயசீலன் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மனிதநேய பணியாளர்களும், தொண்டர் சேவை செய்பவர்களும் கௌரவிப்பப்பட்டனர். பொதுப்பணியில் முன்நின்று உழைப்பவரும், கேட்பவர்களிற்கு இல்லையென்னாது வாரி வழங்குபவரும், எச்சேவையெனினும் தானே முன்னின்று செயற்படுத்துபவருமான திரு. E.S.P நாகரட்ணம் அவர்களிற்கு "மனித நேய ஈகையாளன்" என்ற சிறப்பு பட்டமும் கௌரவமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளிற்கு குறிப்பிடத்தக்களவு மக்கள் வருகை தந்திருந்தனர்.

கல்விக் காருண்யன்" சமய சமூக, கல்வி சார்ந்த அமைப்புக்களிற்கு திரு. E.S.P நாகரத்தினம் அவர்கள் வழங்கி வருகின்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகளை பாராட்டி கௌரவிக்கும் பொருட்டு யாழ் தேசிய கல்வியியற் கல்வியினால் "கல்வி காருண்யன்" என்ற சிறப்பு பட்டமும் மார்ச் மாதம் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார்.

## கனடா காரை கலாச்சார மன்றம் யாழ்ற்ரன் கல்லூரி மைதானத்திற்கு தற்காலிக வேலி அமைக்க உதவி

யாழ்ற்ரன் கல்லூரி மைதானத்திற்குள் ஆடுமாடுகள் வராதவண்ணம் முள்கம்பி வேலி அமைக்க கனடா காரை கலாச்சார மன்றம் 3500 டொலர்கள் கொடுத்து உதவியுள்ளது. ஈழத்து சிதம்பரம் திருத்தொண்டர் சபையாக இருபது வருடங்களிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கனடா காரை கலாச்சார மன்றம் அடுத்த யூன் மாதம் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கு கனடா காரை மக்களிற்கு போதிய விழிப்புணர்வை வழங்கவில்லையெனவும் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு கனடாவில் வதியும் காரை மக்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லையெனவும் காரைநகரில் இருந்து குறைபட்டுக் கொண்டார்கள்.

அதனையடுத்து கனடா காரை கலாச்சார மன்றம் தொலைபேசி மூலம் தனிப்பட்ட அழைப்புக்களை ஏற்படுத்தி உதவிகளை கோரினர். இது வரை 50 பேர் வரையானோர் மட்டுமே கனடா காரை கலாச்சார மன்றத்தினூடாக நிதியுதவி வழங்கியுள்ளார்கள்.

கனடாவில் காரைநகர் மக்கள் சிலர் 'எனது ஊர் காரைநகர்' உடன் தொடர்பு கொண்டு நம்பி பணம் கொடுக்கலாமா அல்லது சேர்க்கும் பணத்தில் 20 விகிதம் தான் செல்லுமா என நம்பிக்கையீனமற்ற வகையில் கேள்விகளை எழுப்பியுள்ளனர். கனடா காரை கலாச்சார மன்றம் கனடா வாழ் காரை மக்களின் உள்ளங்களில் நன்நம்பிக்கையை வளர்க்க வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

## காரை மத்தி முதியோர் பகல் பராமரிப்பு இல்லத்திற்கு விஜயகலா மகேஸ்வரன் நிதியுதவி

கடந்த ஏப்ரல் மாதம் காரைநகரிற்கு விஜயம் செய்த யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் காரைநகர் பொது வைத்தியசாலை, காரை மத்தி முதியோர் பராமரிப்பு இல்லம் மற்றும் பாடசாலைகள், பொது இடங்கள் என பல இடங்களிலும் மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

காரை மத்தி முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கு ஒரு தொகை பணம் வளங்கியதுடன் மேற்கொண்ட உதவிகளை வழங்கவும் ஆதரவு தெரிவித்துள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஏப்ரல் 30, 2011 அன்று நடைபெற்ற காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலை ஆண்டு விழாவில் இருந்து சில காட்சிகள்**


யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதியர் திரு. அ. பஞ்சலிங்கம்


காரை கிட்ஸ் பார்க் நிர்வாக தலைவர் க. நேர்த்திரானந்தன்


சிவஸ்ரீ கு. சண்முகராஜ குருக்கள்


ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி தி.சோமசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Award winning computer support for home and small business.

# MicroITNet Inc

www.microitnet.ca

- Computer Repairs
- Computer Upgrades
- Computer Tuneup
- Data Recovery
- Virus Removal
- Networking Installations
- Software Installation
- New Computer Sales
- Computer Parts & Accessories
- Custom Built System
- Out Call Service

உங்கள் கணனிகளில் ஏற்படும் எவ்வித பிரச்சினைகளையும்
உங்கள் வீடுகளுக்கே விஜயம் செய்து சரிபார்த்துக் கொள்ள
எம்மை அழையுங்கள்...

**416 439 4141**

**WE FIX COMPUTERS**

1213 Ellesmere Road, Scarborough, ON M1P 2X8

## வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



- சம்பள இழப்பீடுகள்
- வீட்டுப்பராமரிப்புச் செலவுகள்
- குழந்தை பராமரிப்புச் செலவுகள்
- கல்வி வணிக இழப்புகள்
- மருத்துவச் செலவுகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்வதற்கு
பலவருட அனுபவம் வாய்ந்த நம்பிக்கையானவர்களை நாடுங்கள்

# Able **Accident** Benefits

Group of Able Legal Services Inc.

**Wijay (Gobu)**
**416-885-2365**

**Kumar**
**416-732-9020**
Royal Accident Benefits

Cash Point.
The Buck Starts Here!

**416-293-2111**

4810 Sheppard Ave. E Suite 207, Scarborough, ON M1S 4N6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




graphicland 416-412-0900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org